செய்தி குறிப்பு எண்—180 நாள்—29.11.2006

பொதுப்பணித்துறை

# முல்லை பெரியாறு பிரச்சினை

தமிழக முதல் அமைச்சர்

## மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி

அவர்களின் உரை.

புதுடெல்லி

**29.11.2006.**

மாண்புமிகு மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் பேராசிரியர் சைப்புதீன் அவர்களே,

மத்திய அரசின் நீர்ப்பாசனத் துறை இணை அமைச்சர் மாண்புமிகு திரு.ஜெய் பிரகாஷ் நாராயண் யாதவ் அவர்களே,

கேரள மாநில முதலமைச்சர் மாண்புமிகு திரு.அச்சுதானந்தன் அவர்களே,

கேரள, தமிழ்நாடு மாநில அமைச்சர்களே,

மத்திய, மாநில அரசு அதிகாரிகளே, நண்பர்களே,

இன்றைய கலந்துரையாடல் நிகழ்ச்சையை ஏற்பாடு செய்து உதவிய மத்திய அரசின் நீர் வளத்துறை அமைச்சர் சைபுதீன் சோஸ் அவர்களுக்கு முதற்கண் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு இரு மாநில மக்களுக்கும் ஏற்ற முடிவுகளை எடுப்பதற்கு உதவிடும் வண்ணம் வருகை தந்துள்ள கேரள முதலமைச்சர் அச்சுதானந்தன் அவர்களுக்கும், கேரள மாநில நீர்வளத்துறை அமைச்சர் பிரேம சந்திரன் அவர்களுக்கும், என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திற்கும், கேரளாவிற்கும் இன்று நேற்றல்ல, சரித்திரக் காலந்தொட்டு உறுதியான, வலிமையான, உண்மையான உறவுகள் உண்டு.

மூவேந்தர்கள் எனப்படும் சேர, சோழ, பாண்டிய மன்னர்களில் சேர வம்ச மன்னர்கள் ஆண்ட பூமி கேரள பூமி.

சரித்திரக் காலத்திற்குப் பிறகும் கூட, சமுதாய எழுச்சிக்காக வித்திட்ட சீரிய சிந்தனையாளர் பலர் கேரளத்தில் தோன்றியவர்கள்

தமிழகத்திலும், தமிழகத்தில் தோன்றியவர்கள் கேரளாவிலும் மக்களின் போற்றுதலுக்கும் உள்ளாகியிருக்கிறார்கள்.

சாதி மத பேதமற்ற சமுதாயம் காண்பதிலும், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதிலும் அழுத்தமான கருத்துடைய நாராயண குருவை தமிழ்நாட்டில் சீர்திருத்த இயக்கம் இன்றைக்கும் பாராட்டிக் கொண்டிருக்கின்றது.

சாதியை ஒழிப்பதற்கு உச்சக் கட்டமாக நடைபெற்ற வைக்கம் போராட்டம் கேரளாவிற்கே உரிய ஒன்று என்பதும், அந்தப் போராட்டத்தின் தலைவராக தமிழகத்தின் தலைவர் தந்தை பெரியார் தான் விளங்கினார் என்பதும், அதனால் அவர் ‘‘வைக்கம் வீரர்’’ என்று பாராட்டப்பட்டார் என்பதும் வரலாறு.

வகுப்புவாரி இட ஒதுக்கீடு உரிமைக்கு வித்திட்ட திராவிட இயக்கத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவரும்—இன்றைக்கும் இலண்டன் மாநகரில் நினைவுக் கல்லறையில் இருப்பவருமான டி.எம்.நாயர் என்ற மாபெரும் தலைவரின் உருவம் தமிழ் மக்களின் நெஞ்சில் ஆழமாகப் பதிந்த ஒன்றாகும்.

இலக்கிய வழியில் நோக்கினாலும், தஞ்சை சோழ மண்டலத்தில் பிறந்த கண்ணகி, மதுரை பாண்டியனிடம் நீதி கேட்டு, கணவன் கோவலனை கள்வன் என்ற குற்றச்சாட்டிலிருந்து மீட்டு; அவளுக்குச் சிலை வடிக்க இமயத்தில் கல் எடுத்து வந்த சேரன் செங்குட்டுவன் நம் இருவருக்கும் சொந்தமானவன். அந்தக் கண்ணகி கோயில் இருக்குமிடம் தான் ‘‘மங்கல தேவி கோவில்’’ என்கிற போது நமக்குப் புல்லரிக்கின்றது.

இப்படி பல நூற்றாண்டு காலமாக சரித்திர தொடர்பும் – கலை, கலாச்சாரா தொடர்பும் – ஆன்மீகத் தொடர்பும் – பகுத்தறிவுத் தலைவர்கள் – அரசியல் தலைவர்கள் தொடர்பும் கொண்ட இரு மாநிலங்கள் தான் கேரளமும், தமிழகமும் ஆகும். இதை எண்ணும் போது; நமக்குள்ளே அரும்பி மலர வேண்டிய உறவுக்குப் பதிலாக – கசப்பும் காழ்ப்பும் அதன் காரணமாக வேற்றுமை உணர்வுகளும் வளரலாமா என்ற கேள்வி எழாமல் இல்லை. அந்த உணர்வுக்கும் நட்புக்கும் இந்திய ஒருமைப் பாட்டுக்கும் இம்மியளவு சேதாரம் வரக் கூடாது என்ற நல்ல எண்ணத்துடன்தான் சில செய்திகளை இன்றைய பிரச்சினைக்குரிய முல்லைப் பெரியாறு தொடர்பாக கூற விரும்புகிறேன்.

உச்சநீதிமன்றம் விசாரித்து 27.2.2006இல் ஆணை வழங்கிய முல்லை பெரியாறு பிரச்சினையில் உச்சநீதிமன்றத்தின் கருத்தை ஏற்று ஒரு தீர்வு காண்பதற்காக நாம் திறந்த மனதுடன் இங்கு கூடியுள்ளோம்.

உச்சநீதிமன்றம் தமிழ்நாடு அரசு 142 அடி வரை நீர்மட்டத்தை முதல் கட்டமாக உயர்த்தவும் மற்றும் எஞ்சிய பலப்படுத்தும் பணிகள் முடிவடைந்தவுடன் அதன் உச்ச நீர் மட்ட அளவான 152 அடி வரை நீரை உயர்த்தவும் உத்தரவு வழங்கிய பின்னர், கேரள அரசு மார்க் 2006இல் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியது.

கேரள அரசின் இசைவோடு எல்லா முக்கிய பலப்படுத்தும் பணிகளை தமிழ்நாடு அரசு செய்து முடித்துள்ளது. வல்லுநர்களின் கருத்துப்படி அணை பாதுகாப்பாக உள்ளது. அது குறித்து எந்தவிதமான அய்யப்பாடும் கொள்ளத் தேவையில்லை. சில எதிர்பாராத

நிகழ்வுகளினால், சிற்றணையை பலப் படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள முடியவில்லை.

தமிழகத்திலே உள்ள வறட்சி மாவட்டங்களான தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகியவற்றில் உள்ள சுமார் இரண்டு இலட்சம் ஏக்கர் நிலத்திற்குப் பாசனம் அளிக்க முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை முதற்கட்டமாக 142 அடி வரையில் உயர்த்துவது மிகவும் அவசியமாகிறது.

இந்த மாவட்டங்களில் பெரியாறு திட்டத்தினால் இதுவரை பயனடைந்து வந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பாசன மற்றும் குடிநீர் பற்றாக்குறை காரணமாக கடந்த 27 ஆண்டுகாலமாக சிரமப்படுகிறார்கள். மேலும் விவசாய வருமான இழப்பையும் அனுபவித்து வருகிறார்கள். இந்த மாவட்டங்களில் அடிக்கடி ஏற்பட்டு வந்த பஞ்சத்தைத் தவிர்க்கவே முல்லை பெரியாறு அணைத் திட்டம் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. கடந்த பல்லாண்டு காலமாக பெரியாறு பாசனத் திட்டத்தினால் விவசாயிகள் அனுபவித்து வந்த பயன்களை இன்று எந்தவித விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப விவரங்களின் அடிப்படை இல்லாமல் மறுக்கக் கூடாது.

உச்ச நீதி மன்றம் தெளிவான ஒரு தீர்ப்பினை அளித்த பிறகும், கேரள அரசு எடுத்த நிலையினால் தமிழ்நாடு விவசாயிகள் நம்பிக்கை இழந்துள்ள நிலையில் இருக்கிறார்கள். ஆகையால், பெரியாறு அணையின் நீரையே ஜீவாதாரமாக நம்பியுள்ள விவசாயப் பெருமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு, இந்தப் பிரச்சினையை மிகுந்த மனிதாபிமானத்துடன் அணுக வேண்டுமென இந்த அவையின்

கவனத்திற்கு நான் கொண்டு வர விழைகின்றேன். கேரள மாநிலம் மிகுந்த நீர்வளம் நிறைந்த மாநிலம். இதற்கு மாறாக, தமிழ்நாடு மிகுந்த நீர்ப்பற்றாக்குறை மாநிலமாகும். இந்தியா போன்ற சம உரிமை பெற்ற, சமத்துவ ஜனநாயக நாட்டில், உபரி நீரை தேவைப்பட்டோருடன் பகிர்ந்து கொள்வதென்பது இயற்கை நியதியாகும். இந்த கருத்தின் அடிப்படையில், மக்களின் நலனுக்காக பல காலங்களுக்கு முன்பே அணைகள் கட்டப்பட்டன. இத்தகைய இயற்கை நியதியை நிறைவேற்றத் தவறினால், அந்த இயற்கையே நம்மை நிச்சயமாக மன்னிக்காது.

மத்திய நீர் வள குழுமமும், வல்லுநர் குழுவும் கள சோதனைகளை மேற்கொண்டும், ஆராய்ந்தும் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடி வரை முதற்கட்டமாக உயர்த்துவதற்கு தகுதியானது என்று உறுதிப்படுத்தியுள்ளதை உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஏற்கனவே ஏற்பட்ட பூகம்பங்கள், அணையின் கட்டுமானத்திற்கு எந்தவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. மேலும், வருங்காலத்தில் பூகம்பமே ஏற்பாட்டாலும் இந்த அணை அதனைத் தாங்கக் கூடிய சக்தி உடையதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இருக்க, அணையின் நீர்மட்டத்தை 142 அடிக்கு உயர்த்தினால் அணை உடைந்துவிடும் என்ற கருத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி, பீதியை உண்டாக்குவது எந்தவிதத்திலும் நியாயமாகாது. புவியீர்ப்பு அடிப்படையில் கட்டப்பட்ட எந்தவொரு அணையும் இதுவரையில் உடைந்ததாக செய்தி எதுவும் கிடையாது. மேலும் புது அணையைப் போல உறுதியாக உள்ள பெரியாறு அணையின் மீது இவ்வாறு சந்தேகப்படுவதற்கு எந்தச் சாத்தியக்கூறும் இல்லை.

வல்லுநர்களின் கருத்துப்படி பெரியாறு அணை இப்போது புதிய அணைக்கு ஒப்பானதாகும்.

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து விவரங்களையும் கருத்திலே கொள்ளும் போது, அணையின் பாதுகாப்பு குறித்து பீதியோ அல்லது குழப்பமோ அடைய எத்தகைய முகாந்திரமும் இல்லை. பெரியாறு அணையின் கீழ் பகுதியில் வசிக்கும் மக்களின் பாதுகாப்பைக் காக்க, தமிழ்நாடு அரசு எப்போதும் தவறாது. அணையின் கீழ் வசிக்கும் மக்களைப் பற்றி எங்களுக்கும் பொறுப்பு உள்ளது.

கேரள அரசு நீர்ப்பாசனம் மற்றும் பாதுகாப்புச் சட்டம் **2003**, சட்டத்திற்கு **18.3.2006** இல் நிறைவேற்றிய திருத்தங்களை வல்லுநர்கள் குழு அளித்த அறிக்கையையும், உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பையும் கருத்தில் கொண்டு, மறுபரிசீலனை செய்து, அந்தத் திருத்தச் சட்டத்தை ரத்து செய்யுமென்று நம்புகிறோம்.

இரு மாநிலங்களின் சமூக மற்றும் பொருளாதார நலனுக்காக ஒருவரையொருவர் நாம் சார்ந்துள்ளோம். இரண்டு மாநிலங்களுக்கிடையே உள்ள இணக்கம் மற்றும் ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் நிலை ஆகியவற்றை கருத்தில் கொள்ளும்போது, இரு மாநிலங்கள் மற்றும் அதன் மக்கள் பயன் அடையும் வகையில் இந்தப் பிரச்சினைக்கு ஒரு சுமூகத் தீர்வு காணப்பட வேண்டும்.

அண்டைய மாநில நட்புணர்வின் அடிப்படையில் கேரள அரசு இந்தப் பிரச்சினையை அணுகி உச்ச நீதிமன்ற ஆணையைச் செயற்படுத்த முழு மனதுடன் ஒத்துழைக்கும் என நான் நம்புகிறேன்.

நன்றி.

**வெளியீடு—இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, செ—9.**